# கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் 2 ஆண்டில் கட்டி முடிக்கப்படும்

## பேரவையில் துணை முதலமைச்சர் உறுதி





சென்னை, ஜுலை 22-

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் 2 ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்று சட்டப் பேரவையில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில், பொதுத் துறை, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சி, ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகள் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் விவாதங்கள் மீது துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அளித்த பதிலுரையில் கூறியிருப்பதாவது:-

இருப்பவர்கள் எல்லோருமே, வாரிவாரிக் கொடுத்து விடுவதில்லை. இரக்கப்படுவதற்கும், ஒரு இதயம் வேண்டும், கொடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும். அப்படி இரக்கப்படுகின்ற இதயமும், கொடுக்கின்ற மனமும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் இருந்தது, புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம் இருந்தது. அதைப்போல நல்லவற்றை பாராட்டுகிற மனமும் அவர்களுக்கு இருந்தது.

ஒரு கணவனும், மனைவியும் வெளியே சென்றுவிட்டு இரவில் வீடு திரும்பினார்கள், ஒரே இருட்டாக இருந்தது. வீட்டுக்குள்ளே போக வேண்டும் என்றால் வாசல் கதவின் பூட்டைத் திறக்க வேண்டும். நான் பூட்டைத் திறக்கிறேன் நீங்கள் கை விளக்கின் வெளிச்சத்தை காட்டுங்கள் என்று கணவனிடம் மனைவி கூறினார். கணவன் காட்டிய கைவிளக்கின் வெளிச்சத்தில், சாவியை எடுத்து மனைவி பூட்டைத் திறக்க முயன்றார். பலமுறை முயற்சி செய்தும் பூட்டை, திறக்கமுடியவில்லை.

உடனே பொறுமை இழந்த கணவன், சாவியை என்னிடம் கொடு நான் திறக்கிறேன் என்று சொன்னார். மனைவி காட்டிய கைவிளக்கின் வெளிச்சத்தில் சாவியை கணவர் எடுத்து பூட்டை திறக்க முயன்றார். பூட்டு முதல் முயற்சியிலேயே திறந்து கொண்டது. அப்போது, கணவனிடம், மனைவி சொன்னாராம், நீங்கள் சரியானபடி வெளிச்சம் காட்டவில்லை அதனால் தான், என்னால் பூட்டைத் திறக்க முடியவில்லை. நான் சரியாக விளக்கை காட்டியதால் தான் உங்களால் பூட்டை உடனே திறக்க முடிந்தது. என்று கூறினாராம். இந்த கதையில் வருகிற மனைவி சொல்வது போலதான் எதிர்க்கட்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் பாராட்டுகிற திட்டங்களைக் கூட குறை சொல்வதில் தான் குறியாக இருக்கிறார்கள். அவர்கள் செய்ய முடியாத சாதனையை, நாம் செய்தால் கூட எதிர்க்கட்சிகள் பாராட்டுவதில்லை. அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நாங்கள், எங்கள் சாதனைகளை தொடர்ந்து கொண்டேயிருக்கிறோம்.

சென்னை மாநகரிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் சீரான வளர்ச்சியை உருவாக்கி அதை ஊக்குவிக்கும் வகையில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆற்றிய சாதனைகளை பெருமையுடன் இப்பேரவையில் குறிப்பிட விரும்புகிறேன். கோயம்பேட்டில் உள்ள சென்னைப் புறநகர் பேருந்து முனையத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில், மாதவரம் பேருந்து மற்றும் சரக்குந்து வளாகத்தில் வடக்கு நோக்கி செல்லும் பேருந்துகளுக்காக ஒருதுணை பேருந்து முனையம் ரூ.95 கோடி செலவில் கட்டப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. தென்மாவட்டங்களிலிருந்து சென்னையை நோக்கி வரும் புறநகர் பேருந்துகளால் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு, கிளாம்பாக்கத்தில் சுமார் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க 22.02.2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்தை இரண்டு வருட காலத்தில் முடித்திட வேண்டும் என்ற குறிக்கோளுடன் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்பேட்டில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் உணவு தானிய அங்காடி மற்றும் சேமிப்பு கிடங்கு மற்றும் வணிக வளாகம் கட்டப்பட்டு 10.10.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது. கோயம்பேட்டில், ரூ.99.37 கோடி மதிப்பீட்டில் பன்னடுக்குமாடி அலுவலகக் கட்டிடத்தின் இறுதிக் கட்டமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் நூற்றாண்டு விழா நினைவாக சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் (CMBT) புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் என்று பெயர் மாற்றம் செய்யப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது. அதன்படி கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் என்று பெயர் மாற்றப்பட்டது.

மனிதகுலம் வாழ இயற்கை தரும் கொடையான மழை வளத்தை சேமித்திட மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அம்மா அவர்கள், இந்திய திருநாட்டிற்கே முன்னோடியாக தமிழகத்தில் செயல்படுத்தினார். அம்மா அவர்கள் காட்டிய வழியில் சென்னைப் பெருநகர் பகுதியில், பெருகிவரும் நீர்தேவையினை இயற்கையான முறையில் நிறைவு செய்ய, தற்போதுள்ள மழைநீர் சேகரிப்பு முறைகளை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும், திட்ட ஆலோசகர் தந்த பரிந்துரைகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019ல் சேர்க்கப்பட்டுள்ளன.

நகர் பகுதியில் நிலவி வரும் அதிகப்படியான நிலத்தின் மதிப்பை கருத்தில் கொண்டு நடுத்தர மற்றும் நலிந்த வருவாய் பிரிவினர் நகரப்பகுதிகளில் வீடுகள் வாங்கி பயன்பெறும் நோக்கத்துடன், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு குறியீடான 1.5 லிருந்து 0.5 கூடுதலாக உயர்த்தி 2.0 ஆக அம்மா அவர்களது அரசு மாற்றி அமைத்துள்ளது.

உதாரணமாக ஒரு மனையின் அளவுக்கு அதாவது 2400 சதுர அடிக்கு 3600 சதுர அடிக்கு பதிலாக 4800 சதுர அடி கட்ட இயலும். உயரமான கட்டடங்களுக்கு தளப்பரப்பு குறியீடு 2.50 லிருந்து 3.25க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் அதே பரப்பளவு உள்ள மனையில் முன்பைவிட அதிக குடியிருப்புகள் கட்ட இயலும், இதனால் குடியிருப்புகளின் விலை குறையும். மேலும், பணம் செலுத்தி பெறக்கூடிய கூடுதல் தளப்பரப்பு குறியீடும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வெவ்வேறு துறைகளில் நடைமுறையில் இருந்த கட்டட விதிகளை ஆராய்ந்து ஒருங்கிணைக்கப்பட்ட விதிமுறைகளை அறிமுகப்படுத்தும் வகையில் பொதுமக்கள் மற்றும் பயனாளிகளின் கருத்துக் கேட்டு உருவாக்கப்பட்ட "தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி விதிகள் மற்றும் கட்டட விதிகள் 2019" அம்மா அவர்களது அரசால் 04.02.2019 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த புதிய விதிமுறையானது மலைப்பகுதிகள் நீங்கலாக, தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தக்கூடியது. இதன் மூலம் குறைந்த அகலம் கொண்ட சாலைகளை யொட்டிய மனைகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அதிக தளங்களுடன் கூடிய கூடுதல் குடியிருப்புகளை கட்டிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் குறிப்பாக மாநகரம் மற்றும் நகரப் பகுதிகளில் வீடுகளின் விலை கணிசமாக குறைய வாய்ப்புள்ளது.

பொதுமக்கள் திட்ட அனுமதி விண்ணப்பங்களை இணையதளம் மூலம் சமர்ப்பிக்க மற்றும் விரைந்து பரிசீலனை செய்ய ஏதுவாக, வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் திட்ட அனுமதி விண்ணப்பத்தின் பல்வேறு நிலைகளிலான கூர்ந்தாய்வு பற்றிய தகவல்கள் மின் அஞ்சல்கள் மற்றும் குறுந்தகவல்கள் வழியாக அனுப்பப்படுகிறது. இதனால் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் திட்ட அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் சென்ட்ரல் ரயில் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளை ஒருங்கிணைத்தும் பல்வேறு போக்குவரத்து முறையினை இணைத்தும் பயணிகளுக்கான வசதிகள் அமைக்கசென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு சுமார் ரூ.400 கோடி நிதியுதவி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் வழங்கியுள்ளது. மெட்ரோ இரயில் திட்ட செயலாக்கத்தின் ஒரு பகுதியாக, கத்திப்பாரா சந்திப்பில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதி உதவியுடன் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் மேம்படுத்தப்பட உள்ளது. பயணிகள் வசதிக்காக பொது மக்கள் வளாகம், கடைகள், உணவகங்கள், வாகன நிறுத்துமிட வசதி, இயற்கை எழில் கொண்ட பூங்கா மற்றும் விளம்பர வசதிகள் ஆகியவை அங்கு அமையும். தற்பொழுது தொழிற்சாலை துவங்குவதற்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின் கீழ் திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெற வேண்டும்.

இதனை எளிதாக்கும் வகையிலும் மாநிலத்தில் தொழில் மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழகம் முழுவதும் திட்ட அனுமதி பெறப்பட்ட தொழிற்சாலை உபயோக மனைப்பிரிவுகளில் (*Approved Industrial Layouts*) அமைந்துள்ள மனைகளில், 25,000 சதுர அடி பரப்பளவு வரை மற்றும் 18.30 மீட்டர் உயரத்திற்கு மிகாத தொழிற்சாலை கட்டடங்கள் கட்டுவதற்கு இணையதளம் மூலமாக விதிகளுக்கு உட்பட்டு திட்ட வரைபடங்கள் சரிபார்க்கப்பட்டபின் எந்த ஒரு அலுவலகத்திற்கும் செல்லாமல் திட்ட அனுமதி பெற்றுக்கொள்ளலாம். இந்த வசதி நாட்டிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் அறிவிக்கப்படாத நிலையில் தமிழகத்தில் முதல் முறையாக அம்மா அவர்கள் அரசால் விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அந்த பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார்.